ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

**தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியநம்பி, கூரநாரயண ஜீயர், நாலூராச்சான் பிள்ளை வருஷ திருநட்சத்திரம் - மார்கழி - கேட்டை**



தொண்டரடிப்பொடியாழ்வார், மண்டங்குடி (அவதாரஸ்தலம்)



பெரிய நம்பிகள், ஸ்ரீரங்கம் - திருவடியில் உடையவர் (நன்றி-ஸ்ரீஅரவிந்தன், ஸ்ரீரங்கம்)

## தொண்டரடிப்பொடியாழ்வார்

### தனியன்

கோதண்டே ஜ்யேஷ்ட நசஷ்த்ரே மண்டங்குடி புரோத்பவம் /
சோளோர்வ்யாம் வநமாலாம்ஸம் பக்தபத்ரேணுமாஸ்ரயே //

தமேவ மத்வா பரவாஸு தேவம் ரங்கேஸயம் ராஜவதர்ஹணீயம் /
ப்ராபோதகீம் யோSக்ருத ஸூக்திமாலாம் பக்தாங்க்ரிரேணும் பகவந்தமீடே //

### நாள்பாட்டு - உபதேசரத்தினமாலை – 11ஆம் பாசுரம்

மன்னியசீர் மார்கழியில் கேட்டையின்று மாநிலத்தீர்
என்னிதனுக் கேற்றமெனி லுரைக்கேன் - துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால்
நான்மறையோர் கொண்டாடுநாள்.

### வாழித்திருநாமம்

மண்டங் குடியதனை வாழ்வித்தான் வாழியே
மார்கழியில் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூ ழரங்கரையே தெய்வமென்றான் வாழியே
திருமாலை யொன்வதஞ்சுஞ் செப்பினான் வாழியே
பண்டு திருப்பள்ளியெழுச்சி பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப் பழித்த செல்வன் வாழியே
தொண்டு செய்து துளபத்தால் துலங்கினான் வாழியே
தொண்டரடிப் பொடியாழ்வார் துனைப்பதங்கள் வாழியே.

இவருடைய திருநாமம் - விப்ரநாராயணன், பக்தாங்க்ரிரேணு, அன்பர்தாள்துளி, தொண்டரடிப்பொடியாழ்வார்.
கைங்கர்யம் - திருநந்தவனம், திருமாலை
இவர் அருளியுள்ள திவ்யப்ரபந்தங்கள் - திருமாலை, திருப்பள்ளியெழுச்சி

### திருப்பாவை மற்றும் திருபள்ளியெழுச்சி ப்ரபந்தங்களுக்கு உள்ள தன்னேற்றம்

எல்லா திவ்யதேசங்களிலும் அநத்யயந காலத்தில் (திருக்கார்த்திகை தொடங்கி பகல் பத்து அத்யயந உத்சவம் தொடங்கும் நாள் வரை உள்ள காலம்) நாலயிர திவ்ய ப்ரபந்தம் அனுஸந்தானம் செய்யும் வழக்கமில்லை. ஆனால் இந்த அநத்யயந காலத்தில் மார்கழி மாதம் பிறந்து விட்டால், காலையில் மட்டும் அந்த மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருப்பாவை ப்ரபந்தங்கள் எல்லா திவ்யதேசங்களிலும் அனுஸந்தக்கப்படுகிறது. இது மற்ற திவ்ய ப்ரபந்தளுக்கு இல்லாத ஒரு தன்னேற்றமாகும்.

திருமாலையை அரியாதார் திருமாலை அரியமாட்டார் என்ற ஒரு வசனம் உண்டு. மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர் என்று தொண்டரடிப்பொடியாழ்வார் சிந்தையாலும் செய்கையாலும் பெரிய பெருமாள் ஒருவரையே தெய்வமாக கொண்டாடினார். மறந்தும் புரந்தொழா மாந்தராக வாழ்ந்தார்.

`கௌஸல்யா ஸுப்ரஜா ராம' என்று இராமபிரானை விஸ்வாமித்திரர் துயில் எழிப்பினார், `உம்பர் கோமானே! உறங்காதெழுந்திராய்' என்று ஆண்டாள் கண்ணபிரானை எழிப்பினாள், தொண்டரடிப்பொடியாழ்வாரோ பெரியபெருமாளை அரங்கத்தம்மாபள்ளி யெழுந்தருளாயே என்று தம்முடைய பாசுரந்தோரும் `திருப்பள்ளியெழுச்சி' என்ற ப்ரபந்ததில் திருபள்ளியுணர்த்தினார்.

<u>இவரை போற்றி உரைக்கும் பாசுரம் - இராமாநுச நூற்றந்தாதி – 13ஆம் பாசுரம்</u>

செய்யும் பசுந்துளவத்தொழில் மாலையும். செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும் பேராத சீரரங்கத்
தையன் கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன். இராமானுசன்சரணேகதி வேறெனக்கே.

<u>இந்த பாசுரத்தின் பொருள்</u>

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை அன்றி மற்றொன்றையும் விரும்பாது இருக்கிற எம்பெருமானர் திருவடிகளே நமக்குச் சரண் என்கிறார் அமுதனார் இப்பாட்டில். தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளைச் செய்து ஸமர்ப்பித்தார் என்று சாடுக்தியாக சொல்கிறார் அமுதனார். துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி என்றும் தொடையத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றி தோள் தொண்டரடிப்பொடி என்றும் தாமே அருளிச்செய்தபடி பொருந்தத் திருத்துழாய் மாலைகளையும், திருமாலை, திருபள்ளியெழுச்சி என்கிற திவ்யப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும் அரங்கத்தைய்யன் திருவடிகளிலே ஸமர்பித்தவர் இவரே.

<u>தொண்டரடிப்பொடியாழ்வார் பெருமை</u>

மன்னியசீர் மார்கழியில் கேட்டையானது துன்னுபுகழ் மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார் பிறப்பால் நான்மறையோர் கொண்டாடும் நாள் (உபதேச ரத்தினமாலை – 11ஆம் பாசுரம்) என்பது உலகமறிந்ததே. இவ்வாழ்வார் அருளிய திருமாலையின் சிறப்பை திருமாலையை அறியாதவன் பெருமாளை அறியான் என்னும் முதுமொழியே விளங்கக் காட்டும். இவ்வாழ்வார் இத்திருமாலை ப்ரபந்தத்தை தொடங்கும் போதே காவலில் புலனைவைத்து என்று தொடங்குின்றார். செவி, வாய், கண் முதலிய இந்திரியங்களைச் சிறையில் வைத்து நமன் தமர்தலைகள்மீதே தாம் நர்த்தனஞ் செய்வதாகக் களித்துப் பேசுகின்றார். இவருடைய சரித்திரத்தில் இவர் சில காலம் இந்தியியங்களுக்கு வசப்பட்டிருந்ததாதகவும், அதன் பலனாகச் சிறையிலிருந்ததாகவும்

சொல்லப்படுகிறது. இந்த நிகழ்ச்சி மந்தோதரியினுடைய ஒரு அழகிய பேச்சை நமக்கு நினைப்பூட்டுகிறது. அதாவது, இராவணன் இராமபிரானால் கொல்லப்பட்டு மாண்டொழிந்தான் என்பதை அறிந்த அவள் போர்க்களத்திலே வந்து புரண்டழும் போது இந்த்ரியாணி புரா ஜித்வா ஜிதம் த்ரிபுவநம் த்வயா, ஸ்மரத்பிரிவ தத் வைரம் அத்ய தைரேச நிர்ஜித: என்றாள் இவள். அதாவது இராவணன் நெடுங்காலம் இந்திரிய நிக்ரஹம் செய்து கோரமா தவம் புரிந்து அதன் பலனாக மூவுலகங்களையும் வென்றான். அந்த இந்திரியங்களானவை இப்பாவி நம்மைப் பங்கப்படுத்திவிட்டானே என்று கறுவியிருந்து ஸமயம்பார்த்து அவையே இவனைப் பங்கப்படுத்திவிட்டனவாம். இந்திரியங்களை அடக்கியாண்டவன் இந்திரிய கிங்கரர்களாலேயே பங்கப்பட்டான் என்று இதிலிருந்து தெறிகிறது. அதுபோலவே இந்த ஆழ்வாரும் தம்மை முன்பு பங்கப்படுத்தின (சிறையிலிட்ட) அவ்விந்தியங்களைத் தாம் பங்கப்படுத்தி காவலில் வைத்து ஸித்தி பெற்றதாகக் கூறிகிறார். (மேலே குறிப்பிட்ட விஷயங்கள் காஞ்சீ ஸ்வாமி அருயுள்ள திருவத்யயனோத்ஸவ வைபவ தீபிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

---

<u>பெரியநம்பி</u>

தனியன்

தநுர்ஜ்யேஷ்டாஸமுத்பூதம் யாமுநாங்க்ரி ஸமாஸ்ரீதம் /
மாஹாபூர்ணம் யதீந்த்ராய மந்த்ரரத்நப்ரதம் பஜே //

கமலாபதி கல்யாணகுணம்ருத நிஷேவயா /
பூர்ண காமாய ஸததம் பூர்ணாய மஹேதே நம: //

<u>வாழித்திருநாமம்</u>

அம்புவியில் பதின்மர்கலை யாய்ந்துரைப்போன் வாழியே
ஆளவந்தார் தாளிணையை யடைந்துய்ந்தோன் வாழியே
உம்பர்தொழு மரங்கேசர்க் குகப்புடையோன் வாழியே
ஓங்கு தனுக்கேட்டை தனிலுதித்த பிரான் வாழியே
வம்பவிழ்தார் வரதருரை வாழி செய்தான் வாழியே
மாறனேரி நம்பிக்கு வாழ்வளித்தான் வாழியே
எம்பெருமானார் முனிவர்க் கிதமுரைத்தான் வாழியே
எழில் பெரிய நம்பி சரணினிதூழி வாழியே.

ஆசாரியர் - ஆளவந்தார்
திருநாமம் - ஸ்ரீபராங்குஸதாஸர், மஹாபூர்ணர், பெரிய நம்பி
திருக்குமாரர் - புண்டரீகாசஷர், திருக்குமாரத்தி – அத்துழாய்
திருவவதாரஸ்தலம் - கோயில்

சிஷ்யர்கள் - திருகச்சிநம்பி, எம்பெருமானார், மலைகுனியநின்றார், ஆரியூரில் ஸ்ரீசடகோப தாஸர், அணியரங்கதத்தமுதனார் பிள்ளை (திருவரங்கத்தமுதனார் திருத்தகப்பனார்), திருவாய்க்குல முடையார் பட்டர்.

இவர் செய்தருளின க்ரந்தம் - திருப்பதிக்கோவை, அமலனாதிபிரான் தனியன்

இராமன் பெரிய உடையாருக்கு சரம கைங்கர்யங்கள் செய்தது போல, பெரிய நம்பியும் மாறனேறி நம்பிக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணினார்.

## இவரை பெரிய நம்பி என்ற அழைக்கக் காரணம்

இவர் எம்பெருமானாருக்கு ஸமாஸ்ரயணம் செய்த முக்ய ஆசார்யர் ஆகையாலே ஆளவந்தாருடைய சிஷ்யர்களுக்குள் பெருமை பெற்றவராய் இருந்தார். இதனால் இவர் பெரியநம்பி என்று அழைக்கப்பட்டார்.

## பெரியநம்பிகள் வைபவச் சுருக்கம்

1) ஆளவந்தார் நியமனத்தின் பேரில் இவரே எம்பெருமானாரை திருவரங்கத்திற்கு அழைத்து வந்தார்.
2) ஆளவந்தார் காலத்திற்குப் பின் ஆளவந்தாரின் மற்ற சிஷ்யர்களாலே பிரார்த்திக்க பெற்ற இவரே எம்பெருமானாருக்கு ஸமாஸ்ரயணம் செய்து அழைத்து வருவதற்காக ஸ்ரீகாஞ்சிக்கு புறப்பட்டுச் சென்றார். ஆனால் இருவரும் மதுராந்தகம் ஏரிகாத்தராமர் கோயிலில் சந்திக்க நேரிட்டதால் அங்கேயே எம்பெருமானாருக்கு சமாஸ்ரயணம் நடைபெற்றது.
3) எம்பெருமானார் மேல்நாட்டுக்கு (திருநாராயணபுரத்துக்கு) எழுந்தருளினபோது இவர் கூரத்தாழ்வானுடன் க்ருமிகண்டனுடைய ராஜா சபைக்குச் சென்று, நம் தர்ஸநத்திற்காக தம் தர்ஸநத்தையும் (கண்களையும்), உயிரையும் த்யாகம் செய்து மஹாநுபாவர் ஆனார்.
4) இவர் தம் குமாரரான புண்டரிகாசக்ஷரையும் பெண் அத்துழாயையும் எம்பெருமானாரின் திருவடியில் ஆச்ரயிக்கச்செய்தார்.
5) ஆளவந்தாரின் சிஷ்யர் சதுர்த்த வர்ணத்தைச் சேர்ந்த மாறனேர் நம்பிக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்கராம் செய்து பெருமை பெற்றார்.

இவரைப்பற்றி பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளியுள்ள வார்த்தாமாலை என்கிற நூலில் இருந்து சில வார்த்தைகளை கீழே அனுபவிப்போம். (புத்தூர் ஸ்வாமிக்கு நன்றி)

## 95ஆம் வார்த்தை

அத்துழாய், பெரியநம்பி ஆபத் தஸயிலே நாம் இங்குநின்றும் கோயிலேறப் போனாலோ? என்ன; நாம் அங்கே போய் ப்ருகிருதியை விட்டால் நாட்டில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிச்சாரும்போது நம்பியகப்படக் கோயிலேறப்போக வேண்டிற்றில்லையோ? என்று பயப்படார்களோ என்று அருளிச்செய்தார்.

## இவ்வார்த்தையின் அர்த்தம்

க்ருமிகண்டனால் திருக்கண்கள் பிடுங்கப்பெற்று அவனுடைய தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து பெரியநம்பி ஸ்ரீரங்கத்திற்குத் திரும்பும் வழியில் பெரியநம்பியின் ப்ராணன் ஆபத்தில் இருக்கும் போது சரமதசை நேருவதற்குமுன் ஸ்ரீரங்கத்திற்கு சென்றுவிட்டால் நன்றாக இருக்கும் என்று நம்பி குமாரத்தியான அத்துழாய் தெரிவித்தபோது, இங்கேயே சரமதசை நேர்ந்தாலும் எம்பெருமான் அருளாலே பரமபதம் கிடைபதில் தட்டியில்லை. நாம் வாஹனாதிகளை வைத்துக்கொண்டு விரைந்து சென்று ஸ்ரீரங்கத்திற்குப் போய் ப்ராணனை விட்டால், மற்றுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் இதை முன்மாதிரியாகக் கொண்டு ஸ்ரீரங்கத்தில் மரணமடைந்தால்தான் மோசஷம் என்று முடிவுகட்டி மற்ற இடங்களில் உயிர் நீங்கினால் மோஷம் கிடைக்காது என்று பயப்படுவார்கள் என்று கூறி வழியிலேயே பரமபதம் அடைந்த செய்தியைக் கூறுவது இவ்வார்த்தை.

## 185ஆம் வார்த்தை

ஒரு நாள் உடையவரும் முதலிகளும் எழுந்தருளா நிற்க, பெரிய நம்பி தண்டனிட, உடையவர் அஞ்ஜலி பண்ணிப்போக, முதலிகள் உடையவரிடம் இது என்ன என்று கேட்க அப்போது, அவருடைய இஷ்டம் அநுவர்த்திக்கையன்றோ நமக்கு ஸ்வரூபம் என்று அருளிச்செய்தார்.

## இவ்வார்த்தையின் அர்த்தம்

எம்பெருமாமான் திருத்துழாயான நித்யஸூரியைத் தன் முடியிலே வைத்துக்கொண்டாலும் இசைந்திருக்கையே அந்த நித்யஸூரியன் பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்குச் சேர்ந்திருப்பதுபோல, பெரியநம்பி தண்டனிட்டதை இசைந்திருப்பதே நமக்கு ஸ்வரூபம் என்றபடி. பெருமாள் நியமனத்தால் ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொண்ட ஸ்ரீபரதாழ்வான் நிலை நிருத்திய அர்த்தம் இங்கே நோக்கத்தக்கது.

## 186 ஆம் வார்த்தை

அநந்தரம் நம்பி ஸ்ரீபாதத்திலே சென்று கேட்க ஆளவந்தாரும் முதலிகளும் எழுந்தருளினாற் போலே இருந்தது அத்தாலே தண்டனிட்டேன் என்ன இது ஹேதுவாக மாட்டாது என்று விண்ணப்பம் செய்ய, ஆளவந்தாருக்குப் பின்பு அர்த்தஸ்திதி இவர்க்கே உள்ளது. வேறு ஒருவருக்கும் இல்லை. ஒருவரை தண்டனிக்கடவதாய் அத்தால் மற்றோரை தண்டனிடுவது என்று அருளிச்செய்தார்.

## இவ்வார்த்தையின் அர்த்தம்

ஆளவந்தாருக்கு பிறகு ஆசார்யத்வபுர்த்தி இவர்க்கே உள்ளது. வேறொருவருக்கும் இல்லை. ஆளவந்தாரை தண்டனிட விரும்பிய அடியேன் அவர் இல்லைாமையாலே ஆசார்யத்வபூர்த்தியில் அவரை ஒத்த இவரை தண்டனிட்டேன் என்று கருத்து.

211ஆம் வார்த்தையின் விவரணம்

பெரியநம்பி திருமகளார் அத்துழாய் புக்ககத்திலே இரா நிற்க, ஒரு நாள் தீர்த்தமாடத் துணைவரவேணும் என்று மாமியாருக்கு அருளிச்செய்ய, உன் சீதநவெள்ளாட்டியைக் கொண்டுபோ என்று தடுத்துச்சொல்ல, நம்பி பக்கல் வந்து நம்பி! என்னை இப்படி சொன்னார் என்ன, நாமறியோம்; உங்கள் ஜீயருக்குச்சொல்லும் என்ன; இவளும் அங்கே சென்று விண்ணப்பம் செய்ய, அவர் அருகே இருந்த முதலியாண்டானைப் பார்த்து உமக்கு இந்தாரும் அம்மா ஸ்ரீதநவெள்ளாட்டி என்று திருவுள்ளமாய் இவரைக் கொண்டுபோ என்ன ஆண்டானும் கூட எழுந்தருளி நீராடப்பண்ணிவித்து, இவருடைய புக்ககத்திலே நின்று தாஸவ்ருத்திகளைச்செய்யத் தொடங்கினார். இவருடைய புக்ககத்தார் இது என் ஆண்டான்? என்ன, என்னை வரவிட்ட உடையவரும் எங்கள் நாச்சியாரும் சொன்னது செய்யவேணுமே என்ன, அவர்களும் நம்பி ஸ்ரீபாதத்தேறப்போய், நம்பி! முதலியாண்டானை வரவிட்டு இப்படி எங்களை நசிப்பிக்கிறதென்? என்ன, நாம் அறிந்தோமோ? எம்பெருமானாருக்குச் சொல்லுங்கோள் என்ன, அங்கே சென்று விண்ணப்பம் செய்ய, உடையவரும் ஆண்டானை அத்துழாய்க்குச் சீதநவடிமையாக் கொடுத்தோம். அங்கு உங்களுக்கு நிற்க ப்ரியம் அன்றாகில் இங்கே நின்று அடிமை செய்கிறது என்று அருளிச்செய்து அழைப்பித்துக்கொண்டருளினார்.

234(5)ஆம் வார்த்தையின் விவரணம்

பொசுங்கின நாற்றமுடைய உணவுக்கு ஆசைப்பட்ட பெருச்சாளி கூண்டிலேயகப்பட்டுத் துன்புறுவது போலே, இவனுக்கு இடரை விளைக்கும் போகங்களை விரும்பினால் அதற்குறிய உணவு இருப்பு படுக்கை முதலானவற்றின் தொடர்பாலே நல்லறிவுகெட்டு தீய அறிவு உண்டாவதால் ஸ்ரீவைஷ்ணவர்களின் கோஷ்டியிலிருந்து விலக்கப்பட்டு விடுவான். தலையேபோகும் ஆபத்து வருவதானாலும் மேற்கூறியபடி ஆத்மஜ்ஞானத்துக்கு அழிவு வராதபடி நிலையான உறுதி கொண்டவனாய் இருக்கவேண்டும். இதற்கு உதாரணமாய் இருந்தவர்கள் - அரசனைத் துரும்பென மதித்து தர்ஸனத்துக்காக உயிரைவிட்ட பெரியநம்பியும், தர்ஸனத்தைக் (கண்ணை) கொடுத்த கூரத்தாழ்வானும் ஆவார்கள்.

378ஆம் வார்த்தையின் விவரணம்

ஒருநாள் ஸ்ரீரங்கத்தில் பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும், திருமாலையாண்டானும் கூடி ஸ்ரீசந்த்ர புஷ்கரிணிக் கரையிலே திருப்புன்னை மரத்தின் கீழே எழுந்தருளி இருந்து, தங்கள் ஆசார்யரான ஆளவந்தார் எழுந்தருளி இருக்கும்படியையும், அவர் அருளிச்செய்தருளின நல்வார்த்தைகளையும் நினைத்து அநுபவித்துக்கொண்டு மிகவும் ஹ்ருஷ்டராய் ஆநந்தமக்நராயக்கொண்டு (இன்பத்தில் மூழ்கினவர்களாய்) எழுந்தருளியிருக்கிற அளவிலே, திருவரங்கச் செல்வர் (பலிஸாதிக்கும் பெருமாள்) பலி ப்ரஸாதிப்பதற்காக எழுந்தருளிப்புறப்பட்டுவர, இவர்களுடைய ஸமாதி பங்கம் (பகவத் பாகதாசார்யாநுவத்துக்குத்தடை) பிறந்து எழுந்திருந்து தண்டனிட வேண்டுகையாலே, கூட்டங்கலைக்கியார் வந்தார்,

இற்றைக்கு மேல்பட ஸ்ரீபலியெம்பெருமானெழுந்தருளாத கோயிலிலே இருக்கக்கடவோம் என்று ப்ரதிஜ்ஞை பண்ணிக்கொண்டார்கள். இப்படி மஹாத்மாக்களான இவர்களுக்குத் தடையாய் இருப்பதைப் பார்த்து, திருவரங்கச்செல்வர் (பலிஸாதிக்கும் பெருமாள்) தன்னை பலிஸாதிக்க எழுந்தருளச்செய்துகொண்டு போகவேண்டாம் என்று நியமித்து விட்டதாகவும், அந்த நியமனம் இன்றளவும் நடப்பதாகவும் கூறுவர்.
(மேலே கூறிப்பிட்ட விஷயங்கள் புத்தூர் ஸ்வாமி தொகுத்து அருளியுள்ள ஆசார்ய வைபவமஞ்ஜரி என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது)

## ப்ரபந்நனுக்கு அந்திம தேச நியமம் இல்லை

சோழ நாட்டு அரசன் வித்வான்களிடத்திலே `சிவாத்பரதரம் நாஸ்தி' என்று ஓலையில் எழுதி கையெழுத்தி வாங்கிக் கொண்டிருந்தான். அவன் நாலூரான் தூண்டுதலால் ராமானுஜரை அழைத்து வர கட்டளை இட்டான். இதையறிந்த கூரத்தாழ்வானும், பெரிய நம்பிகளும் ராமானுஜருக்கு தீங்கு வரக்கூடாது என்று எண்ணி, இவரை திருநாரயணபுரத்திற்கு வெள்ளை வேடம் அணிந்து செல்லச் சொன்னார்கள். கூரத்தாழ்வான் த்ரிதண்ட காஷாயாதிகளை தரித்துக்கோண்டு பெரிய நம்பியுடன் அரச அரண்மனைக்குச் சென்றார். அரசன் அவர்களை `சிவாத்பரதரம் நாஸ்தி' என்று ஓலையில் எழுதி கையியெழுத்து இடவேண்டும் என்றான். அவர்களும் பாசுரங்ககளை எடுத்துக்காட்டி கையியெழுத்திட மறுத்தார்கள். அரசன் கோபங்கொண்டு அவர்களைளுடைய கண்களைப் பிடுங்க உத்திரவிட்டான். இருவரும் கண்களை இழந்தார்கள். ஸ்ரீரங்கம் வரும்வழியில் பெரியநம்பிகள் வயது முதிர்ச்சியின் காரணமாக வேதனை பொறுக்கமாட்டாமல் கீழே சாய்ந்தார். ஆழ்வான் மடியிலே திருமுடியும் அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் கண் வளர்ந்தருள அத்துழாயும் பெரியநம்பிகளிடம் திருவரங்கம் போய் சேந்துவிடலாம் என்று சொல்ல பெரியநம்பி `ப்ரபந்நனுக்கு அந்திமதேச நியமம் இல்லை' என்றுபடி அங்கேயே (பசுபதி கோயில்?) திருநாட்டுக்கு எழுந்தருளினார். அங்கிருந்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரிய நம்பியை ப்ரம்மமேதத்திலே எழுந்தருளப்பண்ணி திருப்பள்ளிப் படுத்தினார்கள். ப்ரபந்நர்கள் எந்த ஊரில் மரணமானாலும் அவர்களுக்கு வைகுந்தம் கிடைக்கும் என்பதை பெரியநம்பிகள் இந்த உலகோர்க்கு உணர்த்தினார். வைகுந்தம்புகுவது மண்ணவர்விதியே.

---

## கூரநாரயண ஜீயர்

### வாழித்திருநாமம்

மார்கைழியில் கேட்டைதனில் வந்துதித்தான் வாழியே
மாலரங்கர் சீரருளை மன்னுமவன் வாழியே
பாருலகில் சுதர்சனத்தின் புகழுரைப்போன் வாழியே
பாஷண்டியனைவரையும் பறக்கடித்தான் வாழியே
சீரெதிராசர் பதத்தில் வீற்றிருப்போன் வாழியே
எப்போதும் பதின்மர்கலை இனி துரைப்போன் வாழியே
ஏரார்ந்த ஆழ்வான்தன் பதம் பணிவோன் வாழியே
எழில் கூரநாரயணமுனிவன் வாழியே.

திருத்தகப்பனார் - பராங்குச நம்பி (சிறிய கோவிந்தப்பெருமாளின் திருக்குமாரர்)
இவர் செய்தருளின க்ரந்தம் - சுதர்சன சதகம்
ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடஸ்தாபகர்
ஆசாரியர் - கூரத்தாழ்வான்

## கூரநாரயண ஜீயர் செய்த கைங்கர்யங்கள்

சோழ அரசன் ராமானுஜருடைய அடியார்கள் ஸ்ரீரங்கம் கோவிலுக்குள் அனுமதிக்க கூடாது என்று ஒரு ஆனை பிரப்பித்திருந்தான். எம்பெருமானார் சம்பந்தத்தை இல்லை செய்து கொண்டு பெருமாளை ஸேவிப்பதில் பயனில்லை என்று முடிவு செய்து, கூரத்தாழ்வான் திருவரங்கத்தில் வஸிப்பதைத் தவிர்த்து திருமாலிருங்சோலை எழுந்தருளினார். ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஸந்நிதி கைங்யர்களுக்கு யோக்யமாகாமல் இருக்க, கூரத்தாழ்வானுடைய தேவிகள் ஆண்டாள் க்ருபையாலே, ஆழ்வான் திருமாலிருங்சோலையிலே எழுந்தருளியிருந்ததை அறிந்து, அங்கு சென்று, ஆழ்வான் திருவடிகளிலே ஆஸ்ரயித்து, ஸந்யஸித்து, ஆசார்யன் குலப்பெருமை நீருபகமாக `கூரநாராயணஜீயர்` என்று திருநாமம் இடப்பெற்றார். இவர் மஹாமாந்த்ரிகராய் இருந்தார். தாம் கற்ற மந்த்ரங்கள் பெருமாள் கைங்கர்யத்துக்கு உபயோகப்படுவதற்காக ஸுதர்ஸநஸதகம் என்ற க்ரந்தத்தை அருளினார்.

## பெரியபெருமாளை காப்பாற்றினார்

ஒருசமயம் மேற்கே ஸ்ரீரங்கபட்டணத்திலிருந்து ஒரு சஷுத்ரமுண்டான ஸந்யாஸி வந்து பெரியபெருமாளை ஸ்ரீரங்கபட்டணத்திற்கு கொண்டு போவதற்காக அத்ருஸ்யாஞ்ஜநத்தைப் போட்டுக்கொண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் பலிபீடத்தில் ப்ரஸாதத்தை எடுத்துக்கொண்டு தேஹதாரணம் பண்ணி மந்த்ரஸக்தியாலே பெரியபெருமாளைத் திருவனந்தாழ்வான் திருப்படுக்கையோடு நாலு அங்குலம் நகற்த்தினான். மூலப்ருத்யரும், நம்பிமாரும், உள்ளூராரும் கண்டு அணைவரிடம் உரைக்க, கூரநாராயணஜீயரும் இந்தச் சேதியைக் கேட்டு, உபாயமாகச் சோதிக்கு மளவில், பலிபீடத்தில் ப்ரஸாதம் அத்ருஸ்யமாய்ப் போகிறபடியை கண்டறிந்தார்.

ஒருநாள் பலிப்ரஸாதத்திலே கடுகும், மிளகும் கலந்து சேர்த்து பலிப்ரஸாதம் பண்ணுவித்தார். அதை அறியாமல் அந்த சஷுத்ர ஸந்யாஸி எம்போதும் போலே அந்த ப்ரஸாதத்தை பசஷிக்க, அழல் வேகத்தாலே கண்ணிலே நீர் சொரிந்து அஞ்ஜனம் கரைந்து வெளிப்பட்டான். அப்போது கூரநாராயணஜீயரும் அந்த ஸந்யாஸியை கருவுகலத்திற்கு அழைத்துச்சென்று பதார்த்தங்களைக் காண்பித்து ஸமாதாநங்களாலே வஸுகரித்து, பெரியபெருமாளை மீண்டும் யதாஸ்தனத்திற்கு மந்த்ரசக்தியாலே எழுந்தருளப்பண்ணிவித்தார். கருவுகலத்தில் அவனுக்கு வேண்டின வஸ்த்ராபரணாதிகளைக்கட்டி, அந்த ஸந்யாஸியின் பின்னே ஆள்கள் கையிலே அனுப்பி, கூட வழித்துணையாக நாலு ஜட்டிகளையும் அனுப்பி, வக்தவ்யாம்ஸத்தை அவர்களுடன் சொல்லி அனுப்பினார். ஸந்யாஸியும் அவர்களுடன் புறப்பட்டு ஜாக்ரதையாய் போய், அப்புறம் நிர்ப்பயனாய் இருக்க, இந்த ஜட்டிகள் நாலுபேரும்,

அவன் அஸு"சியாயிருக்கிற ஸமயத்திலே, சடக்கென அவனை வதித்து, வஸ்த்ராபரணாதிகளை யதாபூர்வமாக கருவுகலத்தில் கொண்டு வைத்தார்கள்.

## நம்பெருமாளுக்கு இடையூராக இருந்த சைவர்களை அழித்தல்

கீழையூரிலே (திருவானைக்கோவில்) சைவம் விஞ்சி, நம்பெருமாள் எட்டாம் திருநாள் அன்று (பங்குனி ஆதிபிர்ம உத்ஸவத்தில்) அகிலாண்டேஸ்வரிக்கு ஸேவை ஸாதித்து ஜம்பு தீர்த்தத்திலே திருவடிவிளக்கி, கிழக்கே உத்தமஸீலிக்கு வடக்கே திருமங்கைமன்னன் திருத்தோப்புக்கு எழுந்தருளுகிறதுக்கு க்ரிமிகண்டன் சோழராஜா நாள் முதலாகச் சைவர்கள் சேஷ்டை பண்ணுகையில், அவர்களை நிரஸிக்கவேணும் என்று இந்தக் கூரநாராயணஜீயர் அவர்களுடனே மருவி ஸ்நேஹம்பண்ணி, புறையறக்கலந்து, அந்த சைவர் விஸ்வ ஸித்தபின்பு, அவர்களுக்கு மஹேஸ்வர பூஜை பண்ணுகிறோம் என்று கிழக்கே காட்டழகியசிங்கர் கோயிலுக்குப் பின் வெளியிலே பெரியதாகச் சாலையும், நிரைச்சலும் கட்டிவைத்து, அதிலே பாகயத்நத்தைப் பண்ணுவித்து, பெரியதாக ஒரு கொப்பரையிலே நெய்யையும் காய்ச்சி வைத்து, சைவர்கள் அனைவரையும் அழைப்பித்து, அவர்கள் அனைவரும் சாப்பிடவந்தவுடனே, தாமும் அந்தக் காய்கிற நெய்க் கொப்பரையிலே நரஸிம்ஹ யந்த்ரத்தை மார்பிலே கட்டிக்கொண்டு குதிக்கிறபோது, அந்த சைவர்கள் அனைவரும் தீய்ந்து பஸ்மமாய்ப் போனார்கள். (இவருக்கு ஒன்றும் ஆகவில்லை)

## வெள்ளப்பெருக்கின்போது நம்பெருமாளை காப்பற்றினார்

ஒருகால விஸேஷத்திலே பதினெட்டாம் பெருக்குக்கு நம்பெருமாள் எழுந்தருளியிருந்தபோது, முன்நடந்தபடி திருபள்ளி ஓடத்திலே ஏறியருளி, திருபள்ளிஓடத்திருநாள் கண்டருளுகையில்; சஷுத்ர மந்த்ராக்ருஷ்டராய் நடுத் திருக்காவேரியிலே ப்ரவாஹத்துடனே எழுந்தருள, அச்சேதியைக் கேட்டு கூரநாராயணஜீயரும், தம்முடைய கையில் வலயபவித்ரத்தை வலமாகத் திருப்ப, பெருமாள் திருப்பள்ளியோடமும் ப்ரவாஹத்துக்கெதிரே நிலையிலே யெழுந்தருளி, நாய்ச்சியாரும் பெருமாளும் ஸுகமாகக் கோயிலிலே எழுந்தருளினார்கள்.

கோயிலுக்கு மேற்கே ஒரு பெரியதாக ஊரணியை வெட்டுவித்து, அதிலே திருபள்ளி ஓடத்திருநாள் நடத்தும்படி செய்து வித்தார். கோயிலிலே இன்னும் பல திருப்பணிகள் செய்தார். தம்முடைய மந்திரசக்தியாலே பல பாஷண்டிகளை விரட்டியடித்தார். கூரநாராயணஜீயர் பக்த்யதிஸயத்தாலே நலந்திகழ் நாராயானஜீயராய் இருந்த இவருக்கு `ஸ்ரீரங்கநாரயண ஜீயர்` என்று திருநாமாய்த்து.

(மேற்குறிய கூரநாராயணஜீயரைப் பற்றிய செய்திகள் புத்தூர் ஸ்வாமி தொகுத்தருளிய கோயிலொழுகு என்கிற நூலிருந்து எடுக்கப்பட்டது)

## நாலூராச்சான் பிள்ளை

### தனியன்

தநுர்ஜ்யேஷ்டா ஸமுத்பூதம் யதிராஜாங்க்ரி ஸம்ஶ்ரிதம் /
வேதாந்த த்வய தத்வஜ்ஞம் தேவராஜ குரும்பஜே //

### இவரைப்பற்றிய பாசுரம் - உபதேச ரத்தினமாலை – 49வது பாசுரம்

ஆங்கவர் பால் பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை
தாம்கொடுத்தார் தம்மகனார் தம்கையில் - பாங்குடனே
நாலூர்பிள்ளைக்கவர்தாம் நல்ல மகனார்க்கவர்தாம்
மேலோர்க்கீந்தா ரவரேமிக்கு.

திருவவதாரஸ்தலம் - தொண்டைமண்டலத்தில் உள்ள மேல்பாடகம் (காஞ்சிபுரம்)
திருநாமங்கள் - தேவப்பெருமாள், தேவராஜாச்சான் பிள்ளை,
தேவேஸர், தேவாதிபர், மேல்நாடு ஆச்சான் பிள்ளை, நாலூராச்சான் பிள்ளை
ஆசாரியர் - நாலூர் பிள்ளை (திருத்தகப்பனார்)
இருப்பிடம் - பெருமாள் கோயில்
சிஷ்யர்கள் - திருவாய்மொழிப்பிள்ளை, திருநாராயணபுரத்து ஆய்,
இளம்பிளிசைப்பிள்ளை
திருவம்ஸம் - கூரத்தாழ்வான் திருவடிகளில் ஆஸ்ரயித்த நாலூரான் திருவம்ஸம்
இவர் அருளிய க்ரந்தம் - சரமோபாய தாத்பர்யம்

### நாலூர்பிள்ளை ஈடு ஸ்ரீகோசம் பெற்ற விதம்

வடக்குத்திருவீதிப்பிள்ளையால் ஏடுபடுத்தப்பட்ட ஈடு முப்பத்தாராயிரப்படியை நம்பிள்ளை பெரியபெருமாளின் ஆனைப்படி தம் சிஷ்யரான ஈயுண்ணி மாதவப்பெருமாளுக்குக் கொடுத்து இது ஓரான் வழியாகத்தான் உபதேசிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இவரிடமிருந்து இவருடைய திருக்குமாரர் ஈயுண்ணி பத்மானாபப் பெருமாளுக்கு சென்றது.

ஆனால் ஈயுண்ணி பத்மானாபப் பெருமாளிடத்திலிருந்து அவருடைய திருக்குமாரருக்குச்செல்லாது அவரை அடிபணிந்த சிஷ்யரான நாலூர்பிள்ளைக்குச் சென்றது. இந்த ஈடு ஸ்ரீகோசம் அவ்விதம் சென்ற வரலாற்றைப் பிள்ளைலோகம் ஜீயர் ஈட்டுத்தனியன் வியாக்கியானத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். அதனை கீழே காண்போம்.

ஈயுண்ணி பத்மனாபப் பெருமாள் நம்பிள்ளையின் நியமனப்படியே ஓராண் வழியாக ஈட்டை உபதேசிக்கக் காத்திருந்தார். காஞ்சிபுரத்திலே பெருமாள் கோவில் பட்டர்கள் திருவீதியில் இருந்த இவருடைய திருமாளிகையில் கோயிலாழ்வாரிலே திருவாரதனமாக எழுந்தருளிப்பண்ணி நிதியை நோக்குவாரைப்போலே கவனமாகப் பாதுகாத்து வந்தார்.

அந்த காலவிசேஷத்தில் நாலூராச்சான் பிள்ளை இவரை அனுகி ஆச்ரயித்து பல தொண்டுகள் செய்து மகிழ்வித்தார். அதனால் ப்ரிதி அடைந்த பத்மானபப்பெருமாள் தம்முடைய திருவாராதனத்தில் இருந்த ஈடு ஸ்ரீகோசத்தை நாலூர்பிள்ளைக்கு ப்ரஸாதிப்பதாக திருவுள்ளம் கொண்டு, அவரை ஸந்நிதியில் பேரருளார் திருமுன்பே அழைத்துச்சேன்று ஓராண் வழியாகவே இந்த ஈட்டை செலுத்த வேண்டும் என்ற பிரமாணத்தை பெருமாளிடம் வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற திருவுள்ளத்துடன் பெருமாளை சேவித்துக் கொண்ட நிற்க, அர்ச்சகமுகேன ஸ்ரீசடகோபனை நாலூர்பிள்ளை திருமுடியிலே ஊன்றிவைத்து குறிப்பால் உணர்த்தி **நீர் இதை எல்லார்க்கும் ப்ரகாசிப்பியும்** என்று அர்ச்சகர் மூலம் திவ்ய ஆஜ்ஞையிட்டருள, அதைக்கேட்ட பத்மானபப்பெருமாளும் மிக உகப்புடனே அந்த ஈடு ஸ்ரீகோசத்தை நாலூர்பிள்ளையிடம் ஸமர்பித்தார். அன்று தொடங்கி நாலூர்பிள்ளைக்கு **அருளாளர் திருவடி ஊன்றினவர்** என்ற திருநாமம் ப்ரசித்தமாயிற்று.

## நாலூராச்சான் பிள்ளை ஈடு ஸ்ரீகோசம் மாமுனிகளுக்கு கிடைக்க உதவினார்

தேவப்பெருமாள் அர்ச்சகர் மூலமாக நாலூர்பிள்ளையிடம் `நீர் திருமலையாழ்வாருக்கு திருவாய்மொழி வ்யாக்யானம் சாதிக்கும்படி ஜோதிஷ்குடியில் தெரிவித்திருந்தோம். திருப்புட்குழி ஜீயர் பரமபதம் அடைந்துவிட்டதால், அவருக்கு ஈடுமுப்பதாறாயிரப்படியும் சேர்த்து ஸாதிக்கவும்` என்று கட்டளையிட்டார். நாலூர்பிள்ளை நான் கிழவனாகிவிட்டேனே என்று தெரிவிக்க, தேவப்பெருமாள் நாலூராச்சான் பிள்ளையிடம் அந்த பொறுப்பைக் கொடுத்தார். நாலூராச்சான் பிள்ளை திருமலையாழ்வாரை திருநாராயணபுரத்திற்கு கூட்டிச்சென்றார். அங்கு இவர் தம்முடைய சிஷ்யர்கள், திருமலையாழ்வார், திருநாராயணபுரத்து ஆய், இளம்பிளிசைப்பிள்ளை மூவருக்கும் ஈடுமுப்பதாறாயிரத்தையும், மூவாயிரத்திற்கான வ்யாக்யானங்களையும் ப்ராசாதித்தார். திருவாய்மொழியினிடத்தில் திருமலையாழ்வாருக்கு இருந்த ஈடுபாடு காரணமாக இவருக்கு திருவாய்மொழிபிள்ளை என்ற பெயர் ஏற்பட்டது.

திருவாய்மொழிப்பிள்ளையிடம் அவருடைய சிஷ்யர் மாமுனிகள் ஈட்டைக் கேட்டு அறிந்து நாடும் நகரமும் நன்கு உணரும்படி, திருவரங்கர் முன்பே ஒரு வருடகாலம் விரித்துரைத்து ஈட்டை பிரசாரப் படுத்தினார். அதனால் அவருக்கு **ஈட்டு பெருக்கர்** என்ற சிறப்புப் பெயர் கிடைத்தது.

மேலே சொன்ன விஷயங்கள் மதுரை பேராசிரியர் முனைவர் ஸ்ரீ.உ.வே இரா.அரங்கராஜன் ஸ்வாமி அருளியுள்ள **மன்னுபுகழ் மணவாளமாமுனிவன்** என்கிற நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியநம்பி, கூரநாரயண ஜீயர், நாலூராச்சான் பிள்ளை திருவடிகளே சரணம

வாசிக தோஷ: சஷந்தவ்ய: